வற்புறுத்துகிறதோ, அதற்கு மத்திய சர்க்காரின் போக்கைக் கண்டு செய்யும் கண்டனத்தில் பெரும் பங்கு உணர்வு பூர்வமாகக் கொண்டு, ஒத்துழைப்புத் தர முன்வர வேண்டும்.

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு கொடுத்த கோதுமையில் ஐந்தில் ஒரு பங்குதான் இந்த ஆண்டு கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு ஆட்சி மாறிய, அரசியல் காரணத்திற்காக இந்த ஆண்டு அந்த அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறதா அல்லது வேறு காரணம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படியெல்லாம் நாம் உள்நோக்கம் கற்பிப்பது முறையாகாது. ஏற்கனவே நான் சொன்னது போல, உத்தர பிரதேசத்திலும், பீகாரிலும், இருக்கும் பஞ்சத்தைக் காட்டிக்கொண்டு இருந்தார்கள். போதாக் குறைக்கு இப்பொழுது சூயஸும், ஈஜிப்டு நாடும், இஸ்ரேல் நாடும் குறுக்கிட்டு விட்டன.

திரு. கே. பி. எஸ். மணி : சார், அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து, இந்த தமிழ் நாட்டுக்குத் தேவையான கோதுமையோ, அரிசியோ கொடுக்காத நிலையில், நம்மை மற்ற மாநிலங்களுக்குக் கொடு, கொடு என்று மேலேயிருந்து விரட்டுகிறார்கள். நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய பழைய காலத்தில்போல, பர்மா போன்ற தேசங்களிலிருந்து தமிழ் நாட்டிற்கு வேண்டிய அரிசி, மற்றவைகளை வேறு தேசங்களிலிருந்து, தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாகவோ அல்லது அரசாங்கமேயோ வரவழைக்க வழி செய்ய மத்திய சர்க்காரிடமிருந்து தடைகளை நீக்க இந்த அரசு கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்மிபுகு திரு. கே. ஏ. மதியழகன் : பர்மா ராச்சியத்திலிருந்து வழி செய்வதற்கு இன்றைக்கு மத்திய சர்க்கார் தயங்குவதை இந்த மாமன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Deputy Tahsildars' list of Madurai district

*359 *Q*.—THIRU A. BALASUBRAMANYAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Deputy Tahsildar's list of Madurai district has not been finalised from 1963 till date ;

(*b*) number of appeals preferred against the orders of the Board of Revenue ; and

(*c*) the number of appeals allowed and the reasons therefor ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) Yes.

(*b*) Seventy eight persons preferred appeals against the orders of the Board of Revenue ;

(*c*) Based on merits, the Government allowed the appeals of 22 persons.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த 22 அப்பீல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். அதுபோக பாக்கியுள்ள அப்பீல்கள் எல்லாம் தகுதியற்றவை என்று கருதி தள்ளப்பட்டு விட்டனவா ? ஏற்கெனவே தகுதியில்லாத ஒரு நபர் தகுதியுள்ள பலருக்கு மேலாக உயர்த்தப்பட்டதன் விளைவாகத்தான் இந்த அப்பீல்கள் வந்தனவா ? இதுகுறித்து அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

1967 ஜூலை 17]

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I decline to answer any supplementary question in the public interest.

சாத்தனூர் அணை ஆயக்கட்டு நிலங்கள்

*360 வினு.—**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணை ஆயக்கட்டு நிலங்களிலுள்ள விவசாயிகளின் நிலையை உத்தேசித்து அங்கு விதிக்கப்படும் பொது நன்மை வரியை ரத்துச் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சாத்தனூர் அணைக்கட்டு சம்பந்தப்பட்ட நிலங்களுக்கு அபிவிருத்தி வரி, மத்தியஸ்த வரி, தண்ணீர் வரி, நிலத்தின் அடிப்படை வரி என்று இப்படிப் பல வரிகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இது விவசாய மக்களுக்கு அதிகச் சுமையாக இருக்கிற காரணத்தால் அபிவிருத்தி வரியையாவது, அல்லது மத்தியஸ்தம்—காம்பவுண்ட்—செய்யப்பட்டு விதிக்கப்படுகிற வரியையாவது குறைத்துக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது புதுமையாக இருக்கிறது. இந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று வட ஆற்காடு மாவட்டத்திலிருந்தோ அல்லது தென்னுர்க்காடு மாவட்டத்திலிருந்தோ எந்தவிதமான விண்ணப்பங்களோ மற்றவைகளோ எந்த விவசாயிகளிடமிருந்தும் வரவில்லை என்று இரண்டு கலெக்டர்களும் தகவல் கொடுத்திருக்கிறுர்கள்.

திரு. எஸ். முருகையன் : இந்த சாத்தனூர் அணைக்கட்டு விவசாயிகள் 3, 4 ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் சர்க்காருக்கு இப்படிப்பட்ட மனுவை அனுப்பி, ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி செய்ய முடியாது என்று பதில் வந்திருக்கிறது. இப்பொழுது, 2, 3 மாதங்களுக்கு முன்பு கூட அந்தப்பகுதி விவசாயிகள் எல்லாம் ஒன்றுகூடி "ஆறு மாதத்திற்குத் தண்ணீர் பாய்கிறது, இரண்டு போக சாகுபடிக்கு உண்டான தீர்வை வசூலிக்கிறுர்கள். 'பெட்டர்மெண்ட் லெவி' வசூலிப்பதால் வரி அதிகமாக இருக்கிறது. இந்தக் குறைகளையெல்லாம் உடனடியாகச் சர்க்கார் நீக்கிவிட வேண்டும்" என்று பலமுறை கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறுர்கள். அமைச்சரவர்கள் எந்தக் கோரிக்கையும் தமக்கு வரவில்லை என்று சொல்லுகிறுர்கள். ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து வரியைக் குறைக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வேறு ஒரு கேள்வி இதிலிருந்து எழுகிறது. கலெக்டர் சொன்னது சரியா, இல்லையா என்ற கேள்வியைக் கொண்டுவந்து விடுகிறது. நான் தவருன தகவலைக் கொடுத்துவிட்டேன் என்று நினைத்துவிடக் கூடாது. இது இந்தக் கேள்வியோடு சம்பந்தப்பட்டது அல்ல. அங்கத்தினரின் குற்றச்சாட்டின் அடிப்படையில் அம்மாதிரி ஏதாவது புகார்கள் வந்ததா என்று வடார்க்காடு தென்னுர்க்காடு மாவட்டக் கலெக்டர்களை இந்த அரசாங்கம் விசாரணை செய்யும்.